செ.வெ.எண்: 10 நாள்: 04.11.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் குரூப்-4 தேர்வு பணியில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களும் தங்களது பணிகளை முறையாக மேற்கொள்ள வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.

-----

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் 06.11.2016 அன்று நடைபெற உள்ள குரூப்- IV தேர்வினை சிறப்பாக நடத்தும் வகையில் பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்., இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (04.11.2016) நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தமிழகம் முழுவதும் குரூப்-4 தேர்வு 06.11.2016 அன்று நடைபெறவுள்ளது. இந்த குரூப்-4 தேர்வினை நமது மாவட்டத்தில் சிறப்பாக நடத்து வகையில் பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனை கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் கல்வித் துறை, கருவூலம், நகராட்சி நிர்வாகம், மின்சார வாரியம், தீயணைப்புத்துறை, போக்குவரத்துறை, வருவாய்த்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையஅலுவலர்கள் மூலம் தேர்வு நடத்தும் அலுவலர்களுக்கு பல்வேறு வகையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் தேர்வு முதன்மை கண்காணிப்பாளர்கள் தேர்வு மையத்தில் தேர்வுக்கான முன்னேற்பாடு பணிகளை செய்வதுடன் தேர்வு நடைபெறும்பொழுது தேர்வர்களின் பதிவு எண்ணை சரிபார்த்து அதன் பின் வினாத்தாள்களை வழங்கி, தேர்வு முடிந்த பிறகு பயன்படுத்திய மற்றும் பயன்படுத்ததாத **OMR** விடைத்தாள்கள், வினாத்தாள்கள், தேர்வுக்கு வருகை தராத தேர்வர்கள் குறித்த விபரங்களை தேர்வாணையத்தால் வழங்கப்பட்ட உரிய படிவத்தில் பூர்த்தி செய்து சுற்றுக் குழு அலுவலரிடம் சமர்பிக்க வேண்டும்.

மேலும், நடமாடும் கண்காணிப்பு குழுவினர் தேர்வு நாளன்று தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு மைய அறைகளை முழுமையாக தணிக்கை செய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ளவும், பறக்கும் படை அலுவலர்கள் தேர்வு மையங்களுக்கு அடிக்கடி சென்று கண்காணித்து எவ்வித முறைகேடுகளும் நடைபெறாத வகையில் பணிகளை மேற்கொள்ளவும், ஆய்வு அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தேர்வு மையத்தில் வினா விடைத்தாள்களை சரிபார்த்தல், தேர்வுக்கு வருகை தராதவர்களின் விபரங்களை தெரிவித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ளவும், தேர்வு மையங்களில் சுத்தமான குடிநீர் வசதி மற்றும் தூய்மை பணியினை நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் மேற்கொள்ளவும், வருவாய்த்துறையினர் அனைத்து தேர்வுமையங்களுக்கு சென்று குடிநீர் வசதி, மின்சார வசதி, கழிப்பறை வசதி, தளவாட சாமான்கள் வசதி போன்ற பல்வேறு வசதிகளை ஆய்வு செய்யவும், மாற்றுத்திறனாளிகளுக்கு தரைத்தளத்தில் தேர்வு எழுத அறை ஒதுக்கீடு செய்யவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் குரூப்-4 தேர்வு பணியில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களும் தங்களது பணிகளை முறையாக மேற்கொள்ள வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**